DHINA THANTHI 04.06.2008

குமரி மாவட்டத்தில் தேசிய அளவிலான

# மீனவர் பாதுகாப்பு பிரசாரகுழு சுற்றுப்பயணம்

## 44 மீனவ கிராமங்களுக்கு சென்றது

கன்னியாகுமரி, ஜூன்.4–

மீனவர்களின் நலனை பாதுகாப்பதற்காக குஜராத்தில் தொடங்கிய தேசிய அளவிலான பிரசார பயண குழு குமரி மாவட்டத்தில் 2 நாட்கள் சுற்றுப்பயணம் செய்தது. இக்குழுவினர் மாவட்டத்தில் உள்ள 44 மீனவ கிராமங்களில் பயணம் மேற்கொண்டு கன்னியாகுமரியில் குமரி மாவட்ட சுற்றுப்பயணத்தை நிறைவு செய்தது.

### மீனவர் பிரசார பயணம்

கடற்கரை நிலம் மற்றும் நீரின் மீது உள்ள பாரம்பரிய மற்றும் வழக்கத்தினால் வரும் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும், கடற்கரை ஒருங்கிணைப்பு சட்டம் 1991–ஐ அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய மீன் தொழிலாளர் பேரவை சார்பில் தேசிய அளவிலான பிரசார பயணம் கடந்த மாதம் 1–ந்தேதி குஜராத் மாநிலம் 'கட்ச்' என்ற இடத்தில் தொடங்கியது.

இந்த பிரசார பயணத்தை தேசிய மீன் தொழிலாளர் பேரவை தலைவர் ஹரேகிருஷ்ணா தேவ்நாத் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். மராட்டிய மாநிலம் ரமேஷ் சந்திரஜூரி, குஜராத் மாநிலத்தை சேர்ந்த அகமது அலி உள்பட பலர் பிரசார குழுவில் இடம்பெற்று உள்ளனர்.

### குமரியில் 44 மீனவர் கிராமங்கள்

பிரசார குழுவினர் குஜராத், மகராட்டியம், கர்நாடகா, ஆந்திரா, ஒரிசா மாநிலங்களுக்கு சென்று தமிழகத்தை அடைந்தது. குமரி மாவட்டத்தில் உள்ள 44 கடலோர மீனவர் கிராமங்களில் கடந்த 2 நாட்கள் பயணம் செய்து விட்டு இறுதியில் கன்னியாகுமரி காந்தி மண்டபத்தில் தனது குமரி மாவட்ட பயணத்தை நிறைவு செய்தது.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு மீன் தொழிலாளர் யூனியன் தலைவர் பீட்டர்தாஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### 3100 கிராமங்களில்...

தேசிய பிரசார குழு நாடு முழுவதும் 3100 கடலோர கிராமங்களில், 8118 கிலோ மீட்டர் தூரம் பயணித்து வருகிற 27–ந்தேதி கொல்கத்தாவில் நிறைவு பெறுகிறது.

Tamil Nadu

உச்சிப்புளி அருகே

## மீனவர் உரிமை பிரசாரம்

பனைக்குளம், ஜூன்.5-

மண்டபம் யூனியன் உச்சிப்புளி அருகே உள்ள தர்கா வலசை கடற்கரையில் மீனவர் உரிமை காப்பது தொடர்பான தேசிய பிரசார கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் பால்ச்சாமி தலைமை தாங்கினார். மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும், கடற்கரை ஒழுங்கமைவு சட்டம் 1991ஐ அமல்படுத்த வேண்டும், சிறப்பு பொருளாதார மண்டலங்கள், அணு உலைகள், மாசுபடுத்தும் அழிவுப்பூர்வமான திட்டங்கள் கடற்கரைகளில் வரக்கூடாது. கடற்கரைகளை பாதுகாக்க வேண்டும், விவசாயிகளை போல ஏழை மீனவர்களின் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும், நீர்வள ஆதாரங்களை தனியாரிடம் ஒப்படைக்க கூடாது, மீன் இறக்குமதியை தடை செய்ய வேண்டும், கடற்கரையில் சுற்றுலா மையங்கள் அமைப்பதை தடுத்து நிறுத்த வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன. கூட்டத்தில் குஜராத், ஆந்திரா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த தேசிய மீனவ சங்க தலைவர்கள் கலந்து கொண்டு பேசினர். நிகழ்ச்சியில் வேதாளை மீனவர் சங்க தலைவர் ஜப்பார், உச்சிப்புளி வட்டார தலைவர் கணேசன், மாவட்ட பொருளாளர் மீனா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

MOVE TO REPLACE CRZ WITH CMZ

## NFF threatens demo near Parliament

**Express News Service**
**Ramanathapuram, June 4**

OVER 50,000 fishermen from all over the country would resort to a demonstration outside Parliament house, unless the Government takes action to withdraw the Coastal Management Zone (CMZ) notification, according to Harekrishna Debnath, chairman of the National Fishworkers Forum (NFF).

Speaking to mediapersons here on Wednesday, Debnath said that instead the government should implement the Coastal Regulation Zone notification.

He said that the national campaign for the rights of fishermen started in Kutch, near Gujarat, on May 1 and would conclude at Kolkata on July 27. The NFF had protested the move of the Ministry of Environment and Forest to replace the Coastal Regulation Zone which was being done at the behest of the World Bank, he said.

He accused the government of permitting companies which were banned in other countries, to establish their strong hold in coastal areas in India.

This would adversely affect marine wealth and the welfare of fishermen and the CMZ was designed for this very purpose. These companies would also enjoy tax concessions for their products, affecting nearly 5 crore fishermen as well as farmers earning their living in the coastal belts.

Therefore, the Forum has decided to conduct demonstrations opposite government offices on June 20. Even then, if the CMZ was not withdrawn, 50,000 fishermen would gather opposite Parliament and burn the copies of CMZ notification, he added.

Paulsamy, president to Ramanathapuram Fishworkers Trade Union (RFTU), Karuppasamy, secretary to RFTU, and the representatives of other state fishermen associations attended the briefing.

Tamil Nadu

# ஜூலை 22ல் 50 ஆயிரம் மீனவர்கள் பார்லிமென்ட் முற்றுகை போராட்டம்

ராமநாதபுரம், ஜூன் 5-

கடற்கரை மேலாண்மை மண்டலம் 2008 சட்டத்தை எதிர்த்து ஜூலை 22ல் 50 ஆயிரம் மீனவர்கள் டில்லியில் பார்லிமென்ட்டை முற்றுகையிட போவதாக தேசிய மீனவர் பேரவை தலைவர் ஹரே கிருஷ்ணா தேபநாத் கூறினார்.

கடற்கரை மேலாண்மை மண்டலம் 2008 சட்டத்தை எதிர்த்து தேசிய மீனவர் பேரவை சார்பில் கடலோர மாநிலங்களில் பிரசார பயணம் நடைபெற்று வருகிறது.

2008 மே ஒன்றில் குஜராத் மாநிலம் கட்ச் என்ற இடத்தில் துவங்கிய பயணம் தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்களில் பிரசாரம் செய்தப்படி ஜூன் 27ல் கோல்கட்டாவில் நிறைவு செய்கிறது. பயணத்தின் போது ராமநாதபுரம் வந்த தேசிய மீனவர் பேரவை தலைவர் ஹரே கிருஷ்ணா தேபநாத் கூறியதாவது: கடற்கரை, கடல்வளம் மற்றும் சுற்றுசூழல் பாதுகாத்திட மீனவர்களின் நலன் கருதி 1991ல் கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் என்ற அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டது. இதன்படி கடல் உயர்மட்ட அலையில் இருந்து 500 மீட்டர் வரை எந்தவித வளர்ச்சி பணிகளோ, ரசாயன தொழிற்சாலைகளோ கட்ட தடை உள்ளது. ஆனால் 2007ல் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் குழு மத்திய அரசுக்கு கொடுத்த அறிவிக்கை பரிந்துரைபடி மத்திய வனம் மற்றும் சுற்றுசூழல் அமைச்சகம் கடற்கரை மேலாண்மை மண்டலம் 2008 என்ற சட்டத்தை கொண்டு வர இருக்கிறது. இச்சட்டம் கொண்டுவரப்பட்டால் கடற்கரை ஓரங்களில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கி ரசாயன தொழிற்சாலைகள் உருவாகி கடல்வளம் முற்றிலும் அழிக்கப்பட்டுவிடும். கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் அறிவிக்கை 1991ஐ திருத்தமின்றி அமல்படுத்த வேண்டும்.

கடற்கரை மண்டல மேலாண்மை சட்டம் 2008ஐ முழுமையாக வாபஸ் பெற வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முதற்கட்டமாக ஜூன் 20ல் அந்தந்த பகுதி மத்திய அரசு அலுவலகம் முன்பு சட்டம் எரிப்பு பேராட்டம் ,அதை தொடர்ந்து ஜூலை 22ல் டில்லியில் 50 ஆயிரம் மீனவர்கள் பார்லிமென்ட்டை முற்றுகையிடவும் முடிவு செய்துள்ளோம். இவ்வாறு ஹரே கிருஷ்ணா தேபநாத் கூறினார்.

# நாடாளுமன்றம் முன் ஆர்ப்பாட்டம்

## தேசிய மீனவர் பேரவை முடிவு

ராமநாதபுரம், ஜூன் 4: இந்திய மீனவர்கள் மீது, இலங்கைக் கடற்படையினர் நடத்தும் துப்பாக்கி சூட்டுச் சம்பவங்களைக் கண்டித்து, இம்மாத இறுதியில் நாடாளுமன்றம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என, தேசிய மீனவர் பேரவை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்தப் பேரவைத் தலைவர் ஹரே கிருஷ்ணா தேபநாத் உள்ளிட்ட நிர்வாகிகள், ராமநாதபுரத்தில் புதன்கிழமை கூறியதாவது:




பிரசாரப் பயணம் குறித்து பேசுகிறார் தேசிய மீனவர் பேரவைத் தலைவர் ஹரே கிருஷ்ணா தேபநாத். உடன், ராமநாதபுரம் மாவட்ட மீன்பிடித் தொழிலாளர் சங்கத் தலைவர் ஏ. பால்ச்சாமி (வலது ஓரம்).

இலங்கை கடற்படையினர், இந்திய மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும். இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள நாட்டுப் படகு மீனவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும். கடல் வளத்தைப் பாழாக்கும் இறால் பண்ணைகளை முழுமையாக அப்புறப்படுத்த வேண்டும். கடல் அட்டைகளைப் பிடிக்க, மத்திய அரசு விதித்துள்ள தடையை நீக்குவதுடன், டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் குழு அறிக்கையையும் முழுமையாக நீக்க வேண்டும்.

கடல் வளத்தைப் பாழ்படுத்தும் சேது சமுத்திரத் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும். கடற்கரை மண்டல மேலாண்மை சட்டத்தை வாபஸ் பெற வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தற்போது இந்தியா முழுவதும் பிரசாரம் செய்து வருகிறோம்.

கடந்த 1.5.08-ல் குஜராத்தில் துவங்கிய இப் பிரசாரம், ஜூன் 27-ம் தேதி கோல்கத்தாவில் நிறைவு பெறுகிறது. தமிழகத்தில் ஜூன் 1-ம் தேதி துவங்கி 10-ம் தேதி வரை, 13 கடலோர மாவட்டங்களில் பிரசாரம் நடைபெறுகிறது.

இக் கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த மாத இறுதியில், நாடாளுமன்றம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## தேசிய மீனவர் பேரவை பொதுக்கூட்டம்

ராமேஸ்வரம், ஜூன் 6 -

ராமேஸ்வரத்தில் தேசிய மீனவர் பேரவை பொது கூட்டம் நடந்தது. ராமநாதபுரம் மாவட்ட மீன்பிடி தொழிலாளர் யூனியன் தலைவர் பால்ச்சாமி தலைமை வகித்தார். தேசிய மீனவர் பேரவை அகில இந்திய தலைவர் ஹரே கிருஷ்ணா தேபநாத், பொது செயலாளர் என்.டி.கோலி, தமிழ்நாடு மீன் தொழிலாளர் யூனியன் மாநில தலைவர் டி.பீட்டர்தாஸ், ராமர் பாலம் பாதுகாப்பு இயக்க தேசிய செயற்குழு உறுப்பினர் தில்லை பாக்கியம், மீனவர் சங்க தலைவர் போஸ் (ராமேஸ்வரம்) சேசு (பாம்பன்), டி.ஆர்.ஆர்.எம்., மகளிர் பிரதிநிதிகள் மல்லிகா, லெட்சுமி உட்பட பலர் பேசினர். மீனவர்களுக்கு கடற்கரை நிலம், நீரன் மீதுள்ள பாரம்பரிய உரிமையை அங்கீகரிக்க வேண்டும். நீர்வள ஆதாரங்களை தனியாரிடம் ஒப்படைக்ககூடாது. ஏழை மீனவர்களின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது.

நு ா ற் று க் க ண க் க ா ன பெண்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மீன் தொழிலாளர் யூனியன் மாவட்ட செயலாளர் ஆறுமுகம் நன்றி கூறினார்.

---

கடற்கரை மேலாண்மை சட்டத்தை கண்டித்து

## தேசிய மீனவர் பேரவை 20-ந்தேதி போராட்டம்

ராமநாதபுரம்,ஜூன்.6- கடற்கரை மேலாண்மை சட்டத்தை கண்டித்து தேசிய மீனவர் பேரவை 20-ந்தேதி போராட்டம் நடத்துகிறது.

### பிரசாரம்

தேசிய மீனவர் பேரவை தலைவர் ஹரே கிருஷ்ண தேப நாத் ராமநாதபுரத்தில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- இந்திய அரசு மீனவ மக்களுக்கு எதிராக கொண்டு வர உள்ள கடற்கரை மேலாண்மை மண்டல சட் டத்தை எதிர்த்து தேசிய மீன வர் பேரவை சார்பில் கட லோர மாநிலங்களில் பிரசா ரம் நடைபெற்று வருகிறது.

கடந்த மே மாதம் 1-ந்தேதி குஜராத் மாநிலம் கட்ச் என்ற இடத்தில் தொடங்கிய இந்த பிரசாரம் கர்நாடகா, கோவா, மகாராஷ்டிரா ஆகிய மாநிலங் கள் வழியாக ராமநாதபுரத்தை அடைந்துள்ளது. கடற்கரையை பாதுகாக்கவும், கடல்வளம் மற்றும் சுற்றுச் சூழலை பாதுகாக்கவும் மீனவ நலன் கருதி கடந்த 1991-ம் ஆண்டு கடற்கரை ஒழுங்கு முறை மண்டலம் என்ற அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டது.

### போராட்டம்

இதன்படி கடல் உயர் மட்ட அலையில் இருந்து 500 மீட்டர் வரை எந்த வளர்ச்சி பணிகளோ, தொழிற் சாலைகளோ கட்டடை விதிக்கப்பட்டது. ஆனால் தற்போது டாக்டர். எம்.எஸ். சுவாமிநாதன் குழுவின் பரிந் துரைப்பட மத்திய அரசு கடற்கரை மேலாண்மை சட் டத்தை இந்த ஆண்டு கொண்டு வர முயற்சிகள் மேற் கொண்டு வருகிறது. இந்த சட்டம் கொண்டு வரப்பட்டால் மீனவர்களின் பாரம்பரிய உரிமைகள் மறுக்கப்படுவதோடு கடல் வளம் முற் றிலும் அழிக்கப்படும்.

எனவே, இந்த சட்டத்தை எதிர்த்தும், அதனை வாபஸ் பெறக்கோரியும் மீனவ மக்களை ஒன்று திரட்டி இந்த பிரசாரம் நடை பெற்று வருகிறது. இந்த கோரிக்கையை வலியுறுத்தி தேசிய மீனவர் பேரவை சார்பில் வருகிற 20-ந்தேதி மீனவர்களை ஒன்று திரட்டி கடற்கரை மேலாண்மைமண்டலசட்ட நகல் எரிப்பு போராட்டம் நடத்தப் படும்.

### முடிவு

இந்த பிரசார பயணம் ஜூன் மாதம் 27-ந்தேதி கொல் கத்தாவில் முடிவடையும். இதை தொடர்ந்து கோரிக்கையை வலியுறுத்தி ஜூலை 22-ந்தேதி பாராளுமன்ற முற்றுகை போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார். அப்போது தமிழ்நாடு மீன் பிடி தொழிலாளர் யூனியன் மாநில தலைவர் பீட்டர்தாஸ், மாவட்ட தலைவர் பால்சாமி, மாவட்ட செயலாளர் கருப்பசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

Tamil Nadu

CHENNAI
THE HINDU • TUESDAY, JUNE 10, 2008

# "New coastal management plan jeopardises livelihood of fishermen"

Special Correspondent

**CHENNAI:** India's 8,118-km coastline and the livelihood of 3.5 million people who depend on fishing in its waters will be threatened if the government presses ahead with its plan to replace the protective measures of the coastal regulation laws of 1991 with a new management concept, the National Fishworkers Forum has said.

The Coastal Management Zone draft notification, which is posted on the website of the Ministry of Environment and Forests for public comment till June 29, splits coastal zones into four categories: ecologically sensitive, of particular concern (population dense or economically and strategically significant), open areas (including water) and island areas such as Andaman and Lakshadweep.

The new plan gives too much power to the State authorities to waive the rights of fishermen and hand over coastal land and water to big business interests engaged in tourism, mariculture, mineral mining, shipping, energy processing and defence-related projects, Harekrishna Debnath, chairman of the forum, said here on Thursday.

Furthermore, he said, the plan would legalise thousands of violations that took place under the 1991 coastal regulation zone notification, many of which were pending in court.

## "Facing crisis"

"Our coastal zone is facing a crisis. In all States, fisherfolk are experiencing a drastic reduction in their catch owing to pollution, the destruction of mangroves and industrial effluents," he said. Yet, the fisheries sector contributed Rs.30,000 crore to India's gross national product for little or no investment from the government.

Flanked by representatives from Gujurat, Maharashtra, Tamil Nadu and Andhra Pradesh who are leading a fisherfolk yatra that has moved through two-thirds of India's coastline from the Rann of Kutch to Chennai through Kanyakumari, he demanded that the government withdraw the draft management notification and implement the 1991 notification until comprehensive legislation that takes into account the perspectives of all parties is in place.

The Machhimar Adhikar Rashtriya Abhiyan, which will move on from Chennai up the east coast to Kolkata, is calling for a National Day of Action on June 20 to enable the fisherfolk to voice their concerns and petition the Environment Ministry.

In the absence of any response, thousands of fisherfolk may go to Delhi on the opening day of Parliament on July 22 for an indefinite agitation.

6 THE NEW INDIAN EXPRESS
MONDAY, JUNE 9 | 2008 | CHENNAI

**State**

● COASTAL MANAGEMENT ZONE

# Fishermen demo reaches Pondy

Express News Service
Puducherry, June 8

THE National Fishworkers' Forum ( NFF) embarked on a national campaign from Kutch to Kanyakumari to save the coast and fishermen. The campaigners reached Puducherry on Sunday.

The campaigners expressed apprehension on the policies of the government and said like the farmers, the fishermen are threatened and should not become extinct due to the implementation of various projects like the Sethusamudram Shipping Canal Project (SSCP), coastal reclamation for industrial use as in the case of Kerala Kulasekharapatnam Thermal Power Plant, to name a few.

Their aim was to oppose the move of the Ministry of Environment and Forest to replace the Coastal Regulation Zone (CRZ) notification of 1991 by the new Coastal Management Zone (CMZ) notification. In this regard, the fishermen would observe June 20 as 'National Day of action against CMZ' through demonstrations and picketing in front of government offices.

> The NFF is planning a march to Parliament to force the Centre to withdraw the Coastal Management Zone notification

Their main demands to the government include withdrawal of CMZ notification, stopping commercial harbours, thermal power plants, sand mining and SSCP which would prove disastrous to 3,600 species of fishes, life ban on sea-cucumber fishing, stop fish import and diversion of tsunami rehabilitation funds to other projects.

They are also planning for a Parliament march during the monsoon session.

THE TIMES OF INDIA, CHENNAI
TUESDAY, JUNE 10, 2008

# Fishermen reject CZM notification

TIMES NEWS NETWORK

**Chennai:** Rejecting the Coastal Zone Management (CZM) notification, the National Fisherworkers' Forum (NFF) has asked the Centre to stop gifting coastal lands and resources to big businesses.

During the Tamil Nadu leg of the nationwide campaign for protecting fishermen rights, NFF chairman Harekrishna said the rights of the fishing community to its traditional land remained unrecognised but chemical hubs, nuclear plants and ill-conceived mega projects like the Sethusamudram Shipping Canal Project were being taken up.

The coastal regulation zone (CRZ) notification of 1991 was to prevent and minimise the impact of human activities on marine and coastal ecology. But the centre and the states had failed to enforce the notification that had been amended 21 times under pressure from the business lobby, he charged.

Now, the centre wanted to scrap the CRZ notification and introduce CZM with the intention of further selling out the coasts to commercial plunder, Harekrishna said.

Fishermen still had no right to housing, access to the sea, to dry and repair nets, to sort, process and sell fish and to berth boats and most of the 3,200 fishing villages had no land title or pattas.

# ஜூன் 20-ல் ஆர்ப்பாட்டம்: தேசிய மீனவர் பேரவை முடிவு

**சென்னை, ஜூன் 9:** கடற்கரை மண்டல மேலாண்மை அறிவிப்பாணையை எதிர்த்து ஜூன் 20-ம் தேதி தமிழகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்த தேசிய மீனவர் பேரவை முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து பேரவையின் தலைவர் ஹரே கிருஷ்ணா தேப்நாத், செயற்குழு உறுப்பினர் ஜேசுரத்தினம், மீன்தொழிலாளர் யூனியன் தலைவர் த. பீட்டர்தாஸ் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நாட்டில் ஆண்டுதோறும் மீன்பிடித் தொழில் மூலம் ரூ. 30 ஆயிரம் கோடி அன்னியச் செலாவணி ஈட்டப்படுகிறது.

ஆனால், மீன்வளத்தையும், மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும் வகையில் பெரிய தொழில் திட்டங்களையும், சேது திட்டம் போன்ற திட்டங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்நிலையில், கரையில் இருந்து 22 கிலோ மீட்டர் தூரம் கடலுக்குள் தொழில்களைத் தொடங்கும் வகையில், கடலோர மேலாண்மை அறிவிப்பாணையை அரசு வெளியிட்டுள்ளது.

இதை எதிர்த்து தேசிய மீனவர் பேரவை சார்பாக நாடு முழுவதும் பிரசாரப் பயணம் நடைபெறுகிறது. கட்ச்-கன்னியாகுமரி-சென்னை-கல்கத்தாவில் இப் பயணம் நிறைவடைகிறது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி, தமிழகத்தில் மாவட்டத் தலைமையிடங்களில் ஜூன் 20-ம்தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

2-வது கட்டமாக ஜூலை 27-ல் நாடாளுமன்றம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று தெரிவித்தனர்.

DAILY DINAMANI Chennai
10.06.08

MALAIMALAR 19.06.08

### கடலோர மேலாண்மை அறிவிப்பாணைக்கு எதிர்ப்பு

# குமரியில் மீனவர்கள் 17 இடங்களில் போராட்டம்

நாகர்கோவில்,
ஜூன். 19–

மத்திய அரசின் கடலோர மேலாண்மை அறிக்கையை தடைவிதிக்க கோரி குமரி மாவட்டத்தில் நாளை 17 இடங்களில் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

**எதிர்ப்பு**

மத்திய, மாநில அரசுகளால் கடற்கரை மண்டல ஒழுங்குமுறை அறிவிப்பாணை 1991 நிறைவேற்றப்படாமல் புதிதாக கடற்கரை மேலாண்மை அறிவிப்பு ஆணை 2008–ஐ கொண்டு வர உள்ளது. இந்த அறிவிப்பு ஆணையை ரத்து செய்ய வேண்டும்.

கடற்கரை மண்டல ஒழுங்குமுறை அறிவிப்பாணை 1991 முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி பல்வேறு கட்ட போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக நாளை (20–ந்தேதி) நாடு முழுவதும் பல்வேறு மீனவர் அமைப்புகள் சார்பில் கடலோர பகுதிகள், மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம், பேரணி நடத்தப்படுகிறது.

**17 இடங்கள்**

குமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மீன் தொழிலாளர் யூனியன் சார்பில் 17 இடங்களில் போராட்டங்கள் நடக்கிறது. நாகர் கோவில் கலெக்டர் அலுவலகம் முன்பும், கன்னியாகுமரி, புத்தன்துறை, ராஜாக்கமங்கலம் துறை, அழிக்கால், முட்டம், கடியப்பட்டினம், குளச்சல், கோடிமுனை, வானியக்குடி, குரும்பனை, உதயமார்த்தாண்டம், இணையம், இணையம் புத்தன்துறை ஆகிய இடங்களில் காலை 10 மணிக்கு தபால் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடக்கிறது.

தக்கலை, குழித்துறையில் காலை 10 மணிக்கு பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடக்கிறது. மாலை 4 மணிக்கு இரவிபுத்தன்துறையில் இருந்து மீனவர்கள் பங்கேற்கும் பிரமாண்டமான பேரணி நடக்கிறது. இதில் 4500–க்கும் மேற்பட்ட மீனவர்கள் கலந்து கொள்கிறார்கள். அதைத் தொடர்ந்து தமிழ்நாடு மீன் தொழிலாளர் மாநில தலைவர் பீட்டர்தாஸ் தலைமையில் தூத்தூரில் கோரிக்கையை வலியுறுத்தி பொதுக்கூட்டம் நடக்கிறது.

DHINA MALAR
20.06.2008

# கடற்கரை மேலாண்மை மண்டல அறிவிப்பாணையை கைவிடக்கோரி இன்று 17 இடங்களில் ஆர்ப்பாட்டம்

**நாகர்கோவில், ஜூன் 20-**

கடற்கரை மேலாண்மை மண்டல அறிவிப்பாணை 2008யை கை விட வலியுறுத்தி இன்று (20ம் தேதி) தமிழ்நாடு மீன் தொழிலாளர் யூனியன் சார்பில் குமரி மாவட்டத்தில் 17 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இது குறித்து தமிழ்நாடு மீன் தொழிலாளர் யூனியன் மாநில தலைவர் பீட்டர்தாஸ் கூறியதாவது:

மீனவ மக்களுக்கு கடற்கரை நிலம் மற்றும் நீரின் மீது உள்ள பாரம்பரிய மற்றும் வழக்கத்தினால் வரும் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். கடற்கரை ஒழுங்காற்று அறிவிப்பாணை 1991-யை அமுல் படுத்த வேண்டும். கடற்கரை மேலாண்மை மண்டல அறிவிப்பாணை 2008யை திணிக்க கூடாது.

கடற்கரையை பாதுகாக்க வேண்டும். சிறப்பு பொருளாதார மண்டலங்கள், அணு உலைகள், மாசு படுத்தும் அழிவு திட்டங்கள் கடற்கரையில் வரக்கூடாது.

சதுப்பு நிலக்காடுகளையோ, அல்லது கடற்கரையில் இயற்கையாய் அமைந்துள்ள சூழ்நிலையையோ பாதிக்கக்கூடாது. நீரியல் உற்பத்தியை கடற்கரையில் தடை செய்ய வேண்டும். நீர் வள ஆதாரங்களை தனியாரிடம் ஒப்படைக்கக் கூடாது.

கடற்கரையின் பல்லுயிர் வளத்தினை பாதுகாக்கவும், மீனவ மக்கள் கடற்கரை மற்றும் கடல் வளங்களை பாரம்பரியமாக பயன்படுத்துவதை பாது காக்கவும் தேசிய அளவில் சட்டங்கள் ஏற்படுத்த வேண்டும். தனிப்பட்ட பொருளாதார பகுதிக்கு என பரந்த மீனவர்களுக்கான மீன் பிடி சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

கடல்சார் மீன் பிடி முறைப்படுத்துதல் சட்டங்களில் மாநிலங்கள் அளவில் மாற்றங்கள் ஏற்படுத்தி மீன் வள மேலாண்மையை செம்மையாக்க வேண்டும். மாநிலங்களுக்கு இடையேயான மீன் பிடித்தலை அமைதியான முறையில் ஒருங்கிணைக்க ஒரு அமைப்பினை உருவாக்க வேண்டும். மண்டல வாரியாக ஒரு அமைப்பை ஏற்படுத்தி அருகில் உள்ள நாடுகள் பரஸ்பரம் அடுத்த பகுதியை அணுகி மீன் பிடிக்க வாய்ப்புகள் ஏற்படுத்த வேண்டும். மீனவர்கள் கடல் எல்லைகளால், எல்லைப் புற பிரச்னைகளால் பாதிக்கப்பட கூடாது.

மீன் துறையில் பெண்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க வேண்டும். வளங்குன்றா மீன் பிடி உபகரணங்களை பயன் படுத்தி சிறு அளவில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு எல்லா தடைகளையும் நீக்க வேண்டும். அனைத்து கடற்கரை மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று (20ம் தேதி) தேசிய மீன் தொழிலாளர் பேரவை சார்பில் நாடு தழுவிய போராட்டம் நடக்கிறது.

அதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு மீன் தொழிலாளர் யூனியன் சார்பில் கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவில் மாவட்ட கலெக்டர் அலுவலகம், கன்னியாகுமரி, புத்தன்துறை, ராஜாக்கமங்கலம் துறை, முட்டம், கடியபட்டணம், குளச்சல், கோடிமுனை, வாணியகுடி, குறும்பனை, உதய மார்த்தாண்டம், இனயம், இனயம்புத்தன்துறை ஆகிய கடலோர கிராமங்களில் தபால் ஆபீஸ் முன்பு ஆர்ப்பாட்டம் நடக்கிறது.

குழித்துறையில் அண்ணா சிலை முன்பிருந்து பேரணி புறப்பட்டு தபால் ஆபீஸ் முன்பு ஆர்ப்பாட்டம் நடக்கிறது. தக்கலையில் தலைமை தபால் ஆபீஸ் முன்பு ஆர்ப்பாட்டம் நடக்கிறது.

மாலை 4 மணிக்கு இரவி புத்தன்துறை குருசடி அருகே இருந்து பேரணி புறப்பட்டு சின்னத்துறை வழியாக தூத்தூர் வந்து அங்கு பொதுக் கூட்டம் நடக்கிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DHINAMANI 20.06.20

# குமரி மாவட்டத்தில் மீனவர்கள் 17 இடங்களில் இன்று ஆர்ப்பாட்டம்

நாகர்கோவில், ஜூன் 19: தமிழ்நாடு மீன்தொழிலாளர் யூனியன் சார்பில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 17 இடங்களில் வெள்ளிக்கிழமை (ஜூன் 20) மீனவர்கள் பங்கேற்கும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இது தொடர்பாக மீன்தொழிலாளர் யூனியன் மாநில தலைவர் த. பீட்டர்தாஸ் கூறியதாவது:

கடற்கரை மேலாண்மை மண்டல அறிவிப்பாணை 2008-ஐ கைவிட வேண்டும் என வலியுறுத்தி நாடு தழுவிய அளவில் போராட்டங்கள் நடைபெறுகின்றன.

அதன் ஒரு பகுதியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 17 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இதன்படி நாகர்கோவிலில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன், கன்னியாகுமரி, புத்தன் துறை, ராஜாக்கமங்கலம்துறை, முட்டம், கடியப்பட்டினம், குளச்சல், கோடிமுனை, வாணியக்குடி, குறும்பனை, உதயமார்த்தாண்டம், இனையம், இனையம்புத்தன்துறை ஆகிய கடலோர கிராமங்களில் அஞ்சல் நிலையங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

குழித்துறையில் அண்ணா சிலை முன்பிருந்து பேரணி புறப்பட்டு அஞ்சல் நிலையம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. தக்கலை அஞ்சல் நிலையம் முன்னும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இரவிபுத்தன்துறை குருசடி அருகேயிருந்து பேரணி புறப்பட்டு சின்னத்துறை வழியாக தூத்தூர் வந்தடைந்து அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும் என்றார் அவர்.

MALAI MALAR 20.06.08

# மீனவர்கள் ஆர்ப்பாட்டம்



மத்திய அரசின் கடலோர மேலாண்மை அறிவிப்பு ஆணைக்கு எதிர்ப்பு தெரிவித்து குமரி மாவட்டத்தில் மீனவர்கள் இன்று 15 இடங்களில் ஆர்ப்பாட்டம் செய்தனர். நாகர்கோவில் கலெக்டர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்த போது எடுத்த படம்.

தினமலர்

DHINA MALAR ◆ நாகர்கோவில் ◆ சனி ◆ ஜூன் 21 ◆ 2008
21.06.08



கடற்கரை மண்டல மேலாண்மை அறிவிப்பாணையை கண்டித்து நாகர்கோவில் கலெக்டர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு மீன் தொழிலாளர் யூனியன் சார்பில் ஆர்ப்பாட்டம் மற்றும் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி நடந்தது.

Dhina Thanthi, 20.06.08

12 தினத்தந்தி நாகர்கோவில் 20–6–2008

குமரி மாவட்டத்தில்

# 17 இடங்களில் மீன் தொழிலாளர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

## கடற்கரை மேலாண்மை அறிவிப்பாணையை கைவிடக்கோரி நடக்கிறது

நாகர்கோவில், ஜூன்.20– கடற்கரை மண்டல மேலாண்மை அறிவிப்பாணையை கைவிடக்கோரி குமரி மாவட்டத்தில் இன்று (வெள்ளிக்கிழமை) 17 இடங்களில் மீன் தொழிலாளர் யூனியன் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

### கோரிக்கைகள்

கடற்கரை மண்டல மேலாண்மை அறிவிப்பாணை 2008–ஐ கைவிட வேண்டும். மீனவ மக்களுக்கு கடற்கரை நிலம் மற்றும் நீரின் மீது உள்ள பாரம்பரிய உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். சதுப்பு நிலக்காடுகளையோ அல்லது கடற்கரையில் இயற்கையாய் அமைந்துள்ள சூழ்நிலையையோ பாதிப்படையச் செய்யக்கூடாது.

மீன் துறையில் பெண்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க வேண்டும். விவசாயிகளைப்போல ஏழை மீனவர்களின் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய மீன் தொழிலாளர் பேரவை சார்பில் இன்று (வெள்ளிக்கிழமை) நாடு தழுவிய போராட்டம் நடைபெறுகிறது.

### 17 இடங்களில் ஆர்ப்பாட்டம்

அதன்படி, தமிழ்நாடு மீன் தொழிலாளர் யூனியன் சார்பில் குமரி மாவட்டத்தில் 17 இடங்களில் இன்று ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. நாகர்கோவிலில் உள்ள கலெக்டர் அலுவலகம் முன், கன்னியாகுமரி, புத்தன்துறை, ராஜாக்கமங்கலம் துறை, முட்டம், கடியபட்டணம், குளச்சல், கோடிமுனை, வாணியக்குடி, குறும்பனை, உதயமார்த்தாண்டம், இனயம், இனயம் புத்தன் துறை ஆகிய கடலோர கிராமங்களில் உள்ள தபால் நிலையங்கள் முன்பும் காலை 10 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதேபோல குழித்துறையில் அண்ணா சிலையிலிருந்து பேரணி புறப்படுகிறது. பேரணி தபால் நிலையம் வந்தடைந்ததும் அங்கு ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. மாலை 4 மணிக்கு இரவிபுத்தன்துறை குருசடி அருகில் இருந்து பேரணி புறப்பட்டு சின்னத்துறை வழியாக தூத்தூர் வந்தடைகிறது. பின்னர் அங்கு பொதுக்கூட்டம் நடக்கிறது.

இந்த தகவலை தமிழ்நாடு மீன்தொழிலாளர் யூனியன் மாநிலத்தலைவர் பீட்டர்தாஸ் வெளியிட்டுள்ளார்.

DHINAMURASU 20.06.2008

# கோரிக்கைகளை வலியுறுத்தி குமரி மாவட்டத்தில் 17 இடங்களில் மீனவர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

நாகர்கோவில், ஜூன் 20-

கடற்கரை மேலாண்மை மண்டல அறிவிப்பாணையை கைவிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி குமரி மாவட்டத்தில் 17 இடங்களில் இன்று மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர்.

மீனவ மக்களுக்கு கடற்கரை நிலம் மற்றும் நீரின் மீது உள்ள பாரம்பரிய மற்றும் வழக்கத்தினால் வரும் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். கடற்கரை ஒழுங்காற்று அறிவிப்பாணை 1991ஐ அமுல்படுத்த வேண்டும். கடற்கரை மேலாண்மை மண்டல அறிவிப்பாணை 2008யை கைவிட வேண்டும். கடற்கரைகளைப் பாதுகாக்க வேண்டும். சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், அணு உலைகள், மாசுப்படுத்தும் அழிவுப்பூர்வமான திட்டங்கள் கடற்கரையில் வரக்கூடாது.

ஏழை மீனவர்களின் கடன்களை விவசாயிகளுக்கு செய்தது போலவே தள்ளுபடி செய்ய வேண்டும், மீன்பிடிப்பிற்குத் தேவையான அளவு குறைந்த விலையில் எரிபொருள் வழங்க வேண்டும்.

கடற்கரை வாழ் மீன் சமூகங்களின் வாழ்வாதாரங்களை அச்சுறுத்தும் மீன் இறக்குமதியைத் தடை செய்ய வேண்டும், நமது கடற்பரப்பில் வெளிநாட்டுக் கப்பல்கள் மீன்பிடிப்பதற்குத் தடை செய்து ஏற்கனவே அளிக்கப்பட்ட அனுமதிகள் ரத்து செய்யப்பட வேண்டும், அமைப்பு சாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பு மசோதா, சட்டம் ஆக்கப்பட வேண்டும், ஐ.எல்.ஓ மாநாட்டில் மீன்பிடிப்பில் உள்ளோருக்கான சலுகைகள் எல்லா மீனவர்களுக்கும் கிடைக்கும் அளவில் மாநில மற்றும் தேசிய அளவில் சட்டங்களை இயற்ற வேண்டும், அனைத்து கடற்கரை மாவட்டங்களில் உள்ள சுயஉதவி குழுக்களின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று தேசிய மீன்தொழிலாளர் பேரவை சார்பில் நாடு தழுவிய அளவில் போராட்டம் நடைபெறுகிறது. அதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு மீன் தொழிலாளர் யூனியன் சார்பில கன்னியாகுமரி மாவட்டத்தில் 17 இடங்களில் காலை 10 மணி முதல் அப்போராட்டங்கள் நடைபெறுகின்றது. நாகர்கோவிலில் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பும், கன்னியாகுமரி, புத்தன்துறை, இராஜாக்கமங்கலம்துறை, முட்டம், கடியப்பட்டணம், குளச்சல், கோடிமுனை, வாணியக்குடி, குறும்பனை, உதயமார்த்தாண்டம், இனையம், இனையம் புத்தன் துறை ஆகிய கடலோர கிராமங்களில் தபால் நிலையங்கள் முன்பும் ஆர்ப் பாட்டம் நடைபெறுகிறது.

குழித்துறையில் அண்ணா சிலை முன்பிருந்து பேரணி புறப்பட்டு தபால் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. தக்கலை தலைமை தபால் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. மாலை 4 மணிக்கு இரவிபுத்தன்துறை குருசடி அருகில் இருந்து பேரணி புறப்பட்டு சின்னத்துறை வழியாக தூத்தூர் வந்தடைந்து அங்கு பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இத்தகவலை தமிழ்நாடு மீன் தொழிலாளர் யூனியன் மாநில தலைவர் பீட்டர்தாஸ் தெரிவித்துள்ளார்.

21.06.08

தின முரசு நாகர்கோவில் Reg.No.KKI/59/2007-2009 21.6.2008




நாகர்கோவில் கலெக்டர் அலுவலகம் முன்பு மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்தையொட்டி வீதி நாடகம் நடைபெற்ற காட்சி.

Dhinamani
21.06.08
கன்னியாகுமரி
சனி

# மீன் தொழிலாளர் சங்கத்தினர் 16 இடங்களில் ஆர்ப்பாட்டம்

நாகர்கோவில், ஜூன் 20: கடற்கரை மேலாண்மை மண்டல அறிவிப்பினை கைவிட வலியுறுத்தி கன்னியாகுமரி மாவட்டத்தில் 16 இடங்களில் தமிழ்நாடு மீன் தொழிலாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு நகரத் தலைவர் செர்லிராஜ் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தை மாநிலத் தலைவர் பீட்டர்தாஸ் தொடங்கி வைத்தார்.

பள்ளம் கிளைத் தலைவர் மரிய அந்தோனி, ராஜாக்கமங்கலம் ஒன்றியப் பொருளாளர் ரெஜி, மருங்கூர் கிளைத் தலைவர் அந்தோனியம்மாள், செல்வராஜ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



நாகர்கோவிலில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு மீன் தொழிலாளர் சங்கத்தினர்.

இதுபோல குளச்சலில் மாவட்ட துணைத் தலைவர் லலிதாராஜ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை மாவட்டத் தலைவர் அலெக்ஸாண்டர் தொடங்கி வைத்துப் பேசினார். முட்டத்தில் சகாயசுதா, அழிக்காலில் மெஸோ, கன்னியாகுமரியில் மோட்சமேரி, புத்தன்துறையில் தமியான், வாணியகுடியில் சாந்தி, கோடிமுனையில் பிரான்ஸிஸ்கால், தக்கலையில் பெர்னாடு அண்ணாத்துரை தலைமையிலும் 16 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மீனவமக்களுக்கு கடற்கரை நிலம் மற்றும் நீரின் மீது உள்ள பாரம்பரிய மற்றும் வழக்கத்தினால் வரும் உரிமைகளை அங்கீரிக்க வேண்டும். கடற்கரை ஒழுங்காற்று அறிவிப்பாணை 1991-ஐ அமல் படுத்த வேண்டும்.

சதுப்பு நிலக்காடுகளையோ அல்லது கடற்கரையில் இயற்கையாய் அமைந்துள்ள சூழ்நிலையோ பாதிக்கக் கூடாது. நீரியல் உற்பத்தியைக் கடற்க்ரையில் தடை செய்யவேண்டும். நீர்வள ஆதாரங்களை தனியாரிடம் ஒப்படைக்கக் கூடாது.

கடல்சார் மீன்பிடி முறைபடுத்துதல் சட்டங்களில் மாநில அளவில் மாற்றங்கள் ஏற்படுத்தி மீன்வள மேலாண்மையை செம்மையாக்க வேண்டும்.

மாநிலங்களுக்கு இடையேயான மீன்பிடித்தலை அமைதியான முறையில் ஒருங்கிணைக்க ஒரு அமைப்பை உருவாக்கவேண்டும். அனைத்து கடற்கரை மாவட்டங்களில் உள்ள சுய உதவி குழுக்களின் கடன்களை தள்ளுபடி செய்யவேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

DHINA MALAR 21.06.08

# குமரியில் மீன் தொழிலாளர்கள் 17 இடங்களில் ஆர்ப்பாட்டம்

## ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

நாகர்கோவில், ஜூன் 21-

**கடற்கரை மண்டல மேலாண்மை அறிவிப்பாணை 2008ஐ கண்டித்து தமிழ்நாடு மீன்தொழிலாளர் யூனியன் சார்பில் 17 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடந்தது.**

இந்தியாவில் 8 ஆயிரத்து 118 கிலோ மீட்டர் நீளம் கடற்கரை உள்ளது. இந்த கடற்கரையிலுள்ள 3 ஆயிரத்து 200 கிராமங்களில் 3.5 மில்லியன் மீனவ மக்கள் பாரம்பரியமாக மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். இவர்கள் 30 லட்சம் டன் கடல் மீன்களை பிடித்து தருகின்றனர். மீன்துறையில் இருந்து வரும் மொத்த உள்நாட்டு உற்பத்தி சுமார் ரூ.30 ஆயிரம் கோடி. இந்தியா மீன் ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு ரூ.4 ஆயிரத்து 200 கோடி பெறுகிறது. நாட்டிற்கு இத்தனை வருவாயை மீன்வளம் மூலம் ஈட்டி தரும் கடற்கரை தற்போது பெரிய நிறுவனங்களுக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

1991ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட கடற்கரை ஒழுங்காற்று அறிவிப்பாணையை மத்திய அரசு சட்டமாக்க மறுத்து அதற்கு பதிலாக 2008 கடற்கரை மேலாண்மை சட்டத்தை அமலாக்கம் செய்ய முயற்சி செய்து வருகிறது. இதனால் மிக அதிகளவில் கடற்கரை விடுதிகள், உணவகங்கள், சுரங்கங்கள், தொழிற்சாலைகள், அணு மற்றும் அனல் மின் நிலையங்கள், ஆபத்தான வேதியியல் பொருள் உற்பத்தி தொழிற்சாலைகள், சிறப்பு பொருளாதார மண்டலங்கள், சிறப்பு உல்லாச சுற்றுலா பகுதிகள், கடலோர நகரங்களின் விரிவாக்கம், துறைமுகங்கள் விரிவாக்கம், தேவையற்ற பெரிய திட்டங்கள் போன்றவை கடலோர சூழ்நிலையையும், கடல் வளங்களையும், மீனவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரத்தையும் அச்சுறுத்துகின்றன.

மீன்பிடித்தல் மிகவும் ஆபத்தான தொழில். பருவகாலத்தில் மட்டுமே வேலை கிடைக்கிறது. எனவே இவர்கள் வருமானம் நிலையானது அல்ல. மீனவர்கள் கல்வி நிலை, ஊட்டச்சத்து நிலை, பொருளாதாரம் ஆகியவற்றில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

எனவே கடற்கரை ஒழுங்காற்று அறிவிப்பாணை 1991ஐ அமல்படுத்த வேண்டும். கடற்கரை மண்டல மேலாண்மை அறிவிப்பாணை 2008ஐ திணிக்க கூடாது. பொருளாதார மண்டலங்கள், அணு உலைகள் போன்றவை கடற்கரைகளில் வரக்கூடாது. நீர்வள ஆதாரங்களை தனியாரிடம் ஒப்படைக்க கூடாது. தனிப்பட்ட பொருளாதார பகுதி என மீனவர்களுக்கான சட்டம் உருவாக்க வேண்டும். மாநிலங்களுக்கு இடையேயான மீன்பிடித்தலை அமைதியான முறையில் ஒருங்கிணைக்க ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும். வளங்குன்றா மீன்பிடிப்புக்கு தேவையான அளவு குறைந்த விலையில் எரிபொருள் வழங்க வேண்டும் மீன் இறக்குமதியை தடை செய்ய வேண்டும். நமது கடற்பரப்பில் வெளிநாட்டு கப்பல்கள் மீன்பிடிப்பதை தடை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய மீன் தொழிலாளர் பேரவை சார்பில் நாடு தழுவிய போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மீன்தொழிலாளர் யூனியன் சார்பில் 17 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடந்தது. நாகர்கோவில் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு நகர தலைவர் ஷெர்லிராஜ் தலைமை வகித்தார். பள்ளம் கிளை தலைவர் மரிய அந்தோணி முன்னிலை வகித்தார். விவசாயிகள் தொழில் முன்னேற்ற சங்கம் மாநில அமைப்பாளர் செல்வராஜ் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார். மாநில தலைவர் பீட்டர்தாஸ், செயற்குழு உறுப்பினர்கள் ராஜம், மேரி, ரெஜி உட்பட பலர் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் போது கோரிக்கைகளை வலியுறுத்தும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது.

### குளச்சல்

குளச்சல் பகுதியில் குளச்சல் பீச்ரோடு, கோடிமுனை போஸ்ட் ஆபீஸ், வாணியக்குடி போஸ்ட் ஆபீஸ் ஆகிய மூன்று இடங்களில் ஆர்ப்பாட்டம் நடந்தது. குளச்சலில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட துணைத்தலைவர் லலிதாராஜ் தலைமை வகித்தார். கோடிமுனையில் நடந்த ஆர்பாட்டத்திற்கு குருந்தன் கோடு ஒன்றிய கமிட்டி உறுப்பினர் பிரான்சிஸ்கான் தலைமை வகித்தார். வாணியக்குடியில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு கிளைச்செயலாளர் சாந்தி தலைமை வகித்தார். இந்த ஆர்ப்பாட்டங்களில் குளச்சல் நகர கவுன்சிலர் ஜெஸ்டினம்மாள், சோனா மேரி மற்றும் மாவட்ட தலைவர் அலெக்சாண்டர் ஆகியோர் பேசினர்.

மேலும் கன்னியாகுமரி, புத்தன்துறை, ராஜாக்கமங்கலம் துறை, அழிக்கால், முட்டம், கடியப்பட்டணம், குறும்பனை, உதயமார்த்தாண்டம், இனயம், இனயம்புத்தன் துறை ஆகிய இடங்களிலும் நேற்று காலை ஆர்ப்பாட்டம் நடந்தது. தக்கலை, குழித்துறை ஆகிய இடங்களில் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடந்தது. தூத்தூரில் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடந்தது. தமிழ்நாடு மீன்தொழிலாளர் யூனியன் சார்பில் மாவட்டத்தில் 17 இடங்களில் நடந்த இந்த பேரணி, பொதுக்கூட்டம், ஆர்ப்பாட்டம் ஆகிய நிகழ்ச்சியில் பல்லாயிரக்கணக்கான கடற்கரையோர மக்கள் கலந்துகொண்டனர்.

### குளு.. குளு.. குற்றாலத்தில்



குற்றாலத்தில் நேற்று காலையில் வெயில் சுட்டெரித்தது. சாரல் மழை பெய்யவில்லை. அருவிகளில் தண்ணீர் வரத்து குறைந்தது. மெயின் அருவியில் ஆண்கள் பகுதியில் குறைவாகவும், பெண்கள் பகுதியில் பாறையை ஒட்டினாற் போலும், ஐந்தருவியில் 3 கிளைகளில் குறைவாகவும், தேனருவி, செண்பகாதேவி அருவி ஆகியவற்றில் மிதமாகவும் தண்ணீர் விழுந்தது. இதமான தென்றல் காற்று வீசியது. காலையில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் குறைவாகவும், இரவு சற்று அதிகமாகவும் காணப்பட்டது.

DHINA THANTHI 21.06.2008

கடற்கரை மண்டல மேலாண்மை அறிவிப்பாணையை கைவிடக்கோரி

# மீன் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

## 15 இடங்களில் நடந்தது




தமிழ்நாடு மீன்தொழிலாளர் யூனியன் மாநில தலைவர் பீட்டர்தாஸ் தலைமையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது எடுத்தபடம்.

நாகர்கோவில், ஜூன்.21– கடற்கரை மண்டல மேலாண்மை அறிவிப்பாணையை கைவிடக் கோரி நாகர்கோவில் உள்பட 15 இடங்களில் மீன் தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

### மண்டல மேலாண்மை

அறிவிப்பாணைக்கு எதிர்ப்பு மத்திய அரசு, கடற்கரை மண்டல மேலாண்மை அறிவிப்பாணை 2008 என்ற புதிய திட்டத்தை கடற்கரை கிராமங்களில் செயல்படுத்த உள்ளது. இந்த அறிவிப்பாணை நிறைவேற்றப்பட்டால், மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் அமைக்கவிருக்கும் எல்கைக்குள், மீன்பிடி தொழில் சார்ந்த மக்களின் சுமார் 90 சதவீதம் குடியிருப்புகள் அகற்றப்பட்டு, மீனவ மக்கள் நிர்க்கதியாக்கப்படுவார்கள் என்றும், 12 கடல் மைல்கள் தூரத்துக்கு கட்டுப்பாடுகள் என்ற போர்வையில் கட்டுமர மீன்பிடித்தொழில், கரைவலை மீன்பிடித்தொழில், வள்ளங்கள், விசைப்படகுகள் மூலம் செய்யப்படும் மீன்பிடித்தொழில்களுக்கு தடை விதிக்கப்படும் என்பது உள்ள பல்வேறு பாதிப்புகளுக்கு மீனவர்கள் உள்ளாக்கப்படுவார்கள் என்றும் மீனவர்கள் தரப்பில் கூறப்படுகிறது.

எனவே கடற்கரை மண்டல மேலாண்மை அறிவிப்பாணை 2008–ஐ கைவிட வேண்டும். மீனவ மக்களுக்கு கடற்கரை நிலம் மற்றும் நீரின் மீது உள்ள பாரம்பரிய உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். சதுப்பு நிலக்காடுகளையோ அல்லது கடற்கரையில் இயற்கையாய் அமைந்துள்ள சூழ்நிலையையோ பாதிப்படையச்செய்யக்கூடாது.

மீன்துறையில் பெண்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க வேண்டும். விவசாயிகளைப்போல ஏழை மீனவர்களின் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய மீன்தொழிலாளர் பேரவை சார்பில் நேற்று நாடு தழுவிய போராட்டம் நடந்தது.

### குமரி மாவட்டம்

அதன்படி, தமிழ்நாடு மீன் தொழிலாளர் யூனியன் சார்பில் குமரிமாவட்டத்தில் 15 இடங்களில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. நாகர்கோவிலில் கலெக்டர் அலுவலகம் முன் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு மீன்தொழிலாளர் யூனியனின் நாகர்கோவில் நகர தலைவர் செர்லிராஜ் தலைமை தாங்கினார். பள்ளம் கிளை தலைவர் மரிய அந்தோணி முன்னிலை வகித்தார்.

விவசாய தொழிலாளர் முன்னேற்ற சங்க மாநில நிர்வாகி எம்.எஸ்.செல்வராஜ் ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார். மீன்தொழிலாளர் யூனியன் மாநில தலைவர் பீட்டர்தாஸ் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசினார்.

### கோரிக்கை அட்டைகள்

ஆர்ப்பாட்டத்தில் மீன்தொழிலாளர் யூனியன் செயற்குழு உறுப்பினர்கள் ராஜம், மேரி, ரெஜி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோரிக்கை வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை கையில் பிடித்திருந்தனர்.

அதில் குறிப்பாக, “கடலும் கடற்கரையும் மீனவர்களுக்கே சொந்தம் என்பதை அமுல்படுத்து” “மத்திய அரசே புதிய கடற்கரை மேலாண்மை மசோதாவை ரத்து செய்” “கடலோர ஒழுங்குமுறை அறிக்கையை அமுல்படுத்து” என்பன உள்ளிட்ட கோரிக்கை வாசகங்கள் இடம்பெற்றிருந்தன. இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களும் எழுப்பப்பட்டன.

### கலைநிகழ்ச்சி

இறுதியில் மீன்தொழிலாளர் யூனியன் கலைக்குழுவினர் கிராமிய பாடலாக பாடியும், வீதி நாடமாக நடித்துக்காட்டியும் கோரிக்கைகளை விளக்கினார்கள். பின்னர் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை கலெக்டர் அலுவலகத்தில் உள்ள அதிகாரியிடம் மாநில தலைவர் பீட்டர்தாஸ் தலைமையிலான நிர்வாகிகள் கொடுத்தனர்.

### கன்னியாகுமரி

இதேகோரிக்கைகளை வலியுறுத்தி கன்னியாகுமரி தபால் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு அகஸ்தீஸ்வரம் ஒன்றிய மீன் தொழிலாளர் யூனியன் தலைவி மோச்சமேரி தலைமை தாங்கினார். கன்னியாகுமரி பேரூராட்சி வார்டு கவுன்சிலர் சிறியபுஷ்பம் முன்னிலை வகித்தார். புதுக்கிராமம் பங்குத்தந்தை ஜோசப் ஆசியுரை வழங்கினார். நெய்தல் சமுதாயக்கல்லூரி துணை இயக்குனர் அல்போன்ஸ் வாழ்த்தி பேசினார்.

ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், 100–க்கும் மேற்பட்ட மீனவ பெண்கள் கலந்துகொண்டனர்.

இதேபோல் கடியபட்டணம், கருங்கல், இனயம், இனயம்புத்தன்துறை, வாணியக்குடி, முட்டம், தக்கலை, குளச்சல், மிடாலம், உதயமார்த்தாண்டம், குழித்துறை, கோடிமுனை, புத்தன்துறை ஆகிய இடங்களிலும் நேற்று மீன்தொழிலாளர் யூனியன் சார்பில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தது.

---

நாகர்கோவில் குட்ஷெப்பர்டு பள்ளியில்

## இலவச மருத்துவ முகாம்

### நாளை நடக்கிறது

நாகர்கோவில், ஜூன்.21– நாகர்கோவில் டவுன் ரோட்டரி சங்கம், ஈத்தாமொழி ரோட்டரி சங்கம் மற்றும் திருவனந்தபுரம் கிம்ஸ் மருத்துவமனை ஆகியவை இணைந்து நடத்தும் இதயம், காது, மூக்கு, தொண்டை, குழந்தை நலம், மகளிர் மற்றும் பொது இலவச மருத்துவ முகாம் நாகர்கோவில் குட்ஷெப்பர்டு மெட்ரிகுலேஷன் பள்ளியில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடைபெறுகிறது.

கிம்ஸ் மருத்துவமனை டாக்டர்கள் சிகிச்சை அளிக்கிறார்கள். நோயாளிகளுக்கு இலவச மருந்து வழங்கப்படுகிறது.

The New Indian Express
21.06.08.

city

CMZ NOTIFICATION

# Fishermen stage protest in Kumari

**Express News service**
**Nagercoil, June 20**

THOUSANDS of fishermen belonging to the Tamilnadu Fish Workers Union (TFU) affiliated to the National Fish Workers Forum organised agitations on Friday in 17 places in Kanyakumari district, including Nagercoil, Kanyakumari, Muttom and Colachel, protesting against the implementation of Coastal Management Zone (CMZ) notification, 2008.

Peter Doss, state president of TFU, which has over 25,000 members, presided over the agitation in front of the collectorate, demanding that the government withdraw the implementation of CMZ notification as it was inimical to the interests of the fishermen who have been enjoying traditional rights of the community.

Noting that the fishermen living in 3,200 fishermen villages have not been issued land pattas for their habitations, he said that if the CMZ notification was implemented, the community may have to vacate their traditional rights and would be evicted from the sea-front habitations.

Arguing that the implementation of CMZ notification might only serve the interests of MNCs who will exploit the marine resources, the agitators said that the sea side resorts, prawn farms, Special Economic Zones and major harbours will only spell doom for the fragile coastal ecology and put the fishing trade, which is a major foreign exchange earner, earning Rs 4,200 crore annually for the country, in limbo.



EXPRESS PHOTO

Tamilnadu Fish Workers Union staging an agitation in Nagercoil demanding the government not to implement the CMZ notification 2008.

The fishermen community is at crossroads due to the CMZ notification which does not allow fishermen to live in their traditional homes near the sea front. The CMZ notification seeks to vacate fishermen from the civic body limits of the given fishing village and also limits their entry into the first 25 nautical miles inside the sea.

The agitators demanded that the government should come forward to implement the Coastal Regulation Zone notification, 1991, taking into consideration the livelihood dependence of 3.5 million fishermen in the country.